(6 pages) **Reg. No. : .......................**

**Code No. : 22127** **Sub. Code : GSTA 3 A/ GSTC 3 A**

B.A. (CBCS) DEGREE EXAMINATION, NOVEMBER 2015.

Third Semester

Tamil — Main

Skill Based Subject — படைப்புக்கலை

(For those who joined in July 2012 and afterwards)

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — (10 × 1 = 10 மதிப்பெண்கள்)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க.

சரியான விடையைத் தேர்ந்து எழுதுக ;

1. கட்டுரையில் எதற்கு இடமில்லை?

(அ) கவிதை நடை (ஆ) பழமொழி

(இ) உத்திகள் (ஈ) சிறுகதை

2. கலைமகள் இதழில் வெளியான எழுத்தாளர் வாசவனின் சிறுகதையின் பெயர் என்ன?

(அ) வாழ்வே மாயம் (ஆ) வாழ்க்கை

(இ) சாவிலே வாழ்வு (ஈ) வாழப் பிறந்தவன்

3. கவிதை என்ற சொல் முதலில் எப்பாடலில் கையாளப்பட்டது?

(அ) புறநானூறு (ஆ) குறுந்தொகை

(இ) கலித்தொகை (ஈ) பரிபாடல்

4. நான்கு சீர்களைக் கொண்ட அடி

(அ) அளவடி (ஆ) நெடிலடி

(இ) குறளடி (ஈ) சிந்தடி

5. புதுக்கவிதையின் இரண்டாம் கட்ட வரலாறு எந்த இதழ் மூலம் மேற்கொள்ளப்பட்டது?

(அ) மணிக்கொடி (ஆ) திராவிடன்

(இ) எழுத்து (ஈ) மஞ்சரி

6. மாப்பஸானின் எந்தச் சிறுகதை முன்னோக்கு உத்தியில் எழுதப்பட்டுள்ளது?

(அ) வளையல் (ஆ) காதணி

(இ) நெக்லஸ் (ஈ) மோதிரம்

7. சிறுகதையில் எதற்கு மிகுதியான இடமில்லை?

(அ) உரையாடல் (ஆ) வருணனை

(இ) கதைக்கரு (ஈ) கதைப்பின்னல்



*Nesamony Memorial Christian College, Marthandam*

8. பரிசோதனை நாடகங்களை வளர்க்கும் விதத்தில் செயல்பட்ட இதழ்

(அ) எழுத்து (ஆ) வெளி

(இ) குரல் (ஈ) குருதி

9. இலக்கிய வடிவங்களில் மூத்தது எது?

(அ) நாடகம் (ஆ) புதுக்கவிதை

(இ) உரைநடை (ஈ) திரைப்படம்

10. குறியீடாக நடிக்கப்பட்ட நாற்காலிக்காரர் நாடகத்தை எழுதியவர் யார்?

(அ) அப்துல் ரகுமான் (ஆ) அ.ந. முத்துச்சாமி

(இ) சகஸ்ரநாமம் (ஈ) சோ. ராமசாமி

பகுதி ஆ — (5 × 5 = 25 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க.

11. (அ) படைப்பிலக்கியம் என்றால் என்ன? விவரிக்க.

(அல்லது)

(ஆ) படைப்பு உணர்வு எவ்வாறு உருவாகின்றது என்பதனைக் கூறுக.



12. (அ) 'கவிதைக்குக் கருத்துச் செறிவே உயிர்நாடி' – விளக்குக.

(அல்லது)

(ஆ) யாப்பிலக்கணத்திற்குரிய ஓசைகள் பற்றி எழுதுக.

13. (அ) பாரதி காலத்தில் புதுக்கவிதைக்கு ஏற்பட்ட எதிர்ப்பு நிலை குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) தளையின் வகைகளைப் படைப்பிலக்கியத்தின் வழி சான்று காட்டி எழுதுக.

14. (அ) சிறுகதையின் கதைப்பின்னல் குறித்து விவரிக்க.

(அல்லது)

(ஆ) சிறுகதையில் பாத்திரப் படைப்பு எவ்வாறு படைக்கப்பட வேண்டும் – விளக்கம் தருக.

15. (அ) ஓரங்க நாடகம் என்றால் என்ன? விளக்குக.

(அல்லது)

(ஆ) படிக்கும் நாடகம், நடிக்கும் நாடகம் இரண்டிற்குமுள்ள வேறுபாட்டினைக் கூறுக.



Nesamony Memorial Christian College, Marthandam

பகுதி இ — (5 × 8 = 40 மதிப்பெண்கள்)

பின்வரும் வினாக்களுக்கு 600 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்க.

16. (அ) படைப்பிலக்கிய விதிகளைச் சுட்டி விரிவான விளக்கம் தருக.

(அல்லது)

(ஆ) தமிழ்ப் படைப்பிலக்கியங்கள் குறித்துக் கட்டுரைக்க.

17. (அ) தொடையின் வகைகளைப் படைப்பிலக்கியத்தின் வழி எடுத்துக்காட்டுடன் விளக்குக.

(அல்லது)

(ஆ) கவிதைச் சுவையின் உத்திகளைச் சான்று தந்து விவரிக்க.

18. (அ) தமிழில் புதுக்கவிதை வளர்ச்சியின் மூன்று கால கட்டங்களை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) கவிதைகளில் காணலாகும் யாப்பிலக்கண நெகிழ்ச்சி குறித்து விவரிக்க.

19. (அ) சிறுகதையின் நடை பற்றிக் கட்டுரைக்க.

(அல்லது)

(ஆ) ஓரங்க நாடகத்தின் பாத்திரப்படைப்பு குறித்து விவரிக்க.



20. (அ) தொலைக்காட்சி நாடகத்தின் அண்மைக் காலப் போக்கினை எடுத்துரைக்க.

(அல்லது)

(ஆ) ஓரங்க நாடகத்தின் பொதுப் பயிற்சிகள் பற்றி எழுதி சான்று தந்து விவரிக்க.

———————



Nesamony Memorial Christian College, Marthandam